I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES R.W.1( On behalf of R3)
M.C.O.P.NO.412/2017

| | | |
|---|---|---|
| Name | : | Alex |
| Designation | : | Legal Manager |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.11.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 01.25 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணி செய்து வருகிறேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ. 1 – பாலிசியின் உண்மை நகல்

எ.ம.சா.ஆ. 2 – முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று

3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்திற்குண்டான வாகனம் TN 23BJ 0615 TATA Ace என்ற வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்குண்டான் காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். அந்த விபத்து சமயத்தில் ஆர்.சி மற்றும் ஓட்டுனர் உரிமம் அகியவை நடைமுறையில் தான் இருந்தது என்றால் சரிதான்.

இதனுடைய தொடர்புடைய வழக்கு WC 149/2015 என்ற வழக்கை மேகலா என்ற மனுதாரர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதேபோல் WC 150/2015 என்ற வழக்கை நாகம்மாள் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த இரண்டு வழக்குகளுக்கும் எங்கள் நிறுவனத்தின் மேல் தீர்ப்பானது அதற்கான பணத்தை நீதிமன்றத்தில் செலுத்திவிட்டோம். சாட்சி சொல்கிறார் அந்த 2 நபர்களும் பாலிசிக்கு உட்பட்டிருந்ததால் பணம் வழங்கினோம்.

விபத்தில் இறந்துபோன பாபு என்கிற அப்துல் ரகுமான் என்பவர் goods owner என்ற முறையில் பயணம் செய்தார் என்றால் சரியல்ல. இந்த விபத்து குறித்து நான் புலன் விசாரணை செய்து அந்த அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவை என்றால் தாக்கல் செய்கிறேன். பாபு என்கிற அப்துல் ரகுமான் இரும்பு லோடு எடுத்து சென்று பெங்களூரில் இறக்கிவிட்டு திரும்பி வரும்போது தான் விபத்து நடந்தது என்றாலும் அதை தாக்கல் செய்தால் அந்த விவரம் தெரியவரும் என்பதால் அந்த அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, சாட்சி சொல்கிறார் commercial வாகனத்தில்2 பேர் மட்டுமே பயணிக்க அனுமதி உண்டு. அதன் படி 3 வது நபர் அவருக்கு seating capacity கிடையாது.

இந்த விபத்து குறித்து TATA Ace உரிமையாளரை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. எங்கள் வாகனத்திற்கு அனைத்து ஆவணங்களும் நடைமுறையில் இருந்ததால் எங்கள் நிறுவனம் இழப்பீடு தர கடமைப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே 2 பேருக்கு இழப்பீடு கொடுத்ததால் இவருக்கு இழப்பிடு வழங்க வேண்டும் என்பது சரியல்ல.

பாலிசி package policy என்றாலும் அதில் goods owner க்கும் பொருந்தும் என்பதாலும் அவருக்கு இழப்பீடு எங்கள் நிறுவனம் தான் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**4 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 3 ம் எதிர்மனுதாரருக்காக சாட்சியம் அளிக்கிறேன். என் மனுவில் long cause title ல் 3 வது எதிர்மனுதாரராக யார் போடப்பட்டுள்ளார்கள் என்றால் கோபிநாத் என்று உள்ளது. தவறான தரப்பினர் வரிசையின் அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ரேங்க் தவறாக இருப்பதால் நான் சாட்சியம் அளிக்க கூடாது என்றாலும் அதை திருத்தம் செய்த பிறகு தான் நான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றாலும் மனுதாரர் தரப்பில் அவ்வாறு தாக்கல் செய்துள்ளார்கள். தவறான மனுவில் தவறாக சாட்சியம் அளிக்கிறேனா என்றால் நான் என்னுடைய நிறுவனமான TATA AIG General Insurance Company Limited, Chennai சார்பாக சாட்சியம் அளிக்கிறேன்.

நான் தாக்கல் செய்த எதிருரையை படித்து பார்த்துள்ளேன். அதில் 2 வது பத்தியில் TN 23 BJ 0615 வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அப்படி இல்லை. எதிருரையில் அவ்வாறு தான் உள்ளது என்றாலும் நான் தவறாக

சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இருப்பதை இல்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் தங்கள் மனுவில் இறந்த நபர் சரக்கின் உரிமையாளர் என்ற ஓதாவில் பயணம் செய்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான், வேறு எங்கும் சொல்லவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள எதிருரையிலும் சரக்கின் உரிமையாளராக பயணம் செய்யவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், அவர் gratituous passenger என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிருரையில் அவர் சரக்கின் உரிமையாளராக பயணம் செய்யவில்லை என்று சொல்லாத நிலையில் gratituous passenger என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. அவர் அங்கிகரிக்கப்படாத பயணி என்று சொல்வதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கையில் உள்ளது.

முதல் தகவல் அறிக்கையில் 3 நபர்கள் பயணம் செய்தவர்கள் இறந்துவிட்டார்கள் என்று உள்ளது என்றால் சரிதான், ஆனால் அவர் சரக்கின் உரிமையாளர் என்று எங்கும் குறிப்பிடவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் இறந்தவர் உட்பட மற்றும் இதர 2 நபர்களும் அங்கீகரிக்கப்படாத பயணம் செய்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் 2 நபர்கள் ஓட்டுனர் மற்றும் கிளினர் என்ற முறையில் seating capacity 2 என்பதால் அவர்கள் இருவருக்கும் நாங்கள் கொடுத்தோம். WC ல் வழங்கப்பட்டது விசாரணை செய்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதை வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். அந்த award copy யை நாங்கள் கட்டிவிட்டோம். அந்த உத்தரவின் மீது நாங்கள் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

மோட்டார் வாகன சட்டத்தின் படி 3 வது நபருக்கு சரக்கின் உரிமையாளர் என்றும் அதனால் அவருக்கு கவரோஜ் இல்லை என்று சொல்கிறேனா என்றால் உரிமையாளருக்கு கவரேஜ் இல்லை என்று சொல்லவில்லை, commercial வாகனத்தில் 2 பேர் மட்டுமே பயணிக்க வேண்டும் என்பதாலும் அந்த வாகனம் அந்த வடிவில் அமைக்கப்பட்டதாலும் அந்த 2 பேருக்கும் மட்டும் இழப்பீடு வழங்கியுள்ளோம்.

மோட்டார் வாகன சட்டம் பிரிவு 147 படி சரக்கின் முகவரோ அல்லது உரிமையாளருக்கோ default coverage உண்டு என்று சொன்னால் சரியல்ல. சாட்சி சொல்கிறார் கவரேஜ் சரக்கின் உரிமையாளருக்கும் மற்றும் ஓட்டுனருக்கும் மட்டுமே உண்டு என்று சொல்கிறார்.

நான் இழப்பீடு வழங்குவதிலிருந்து தப்பிக்க வேண்டி அவர் அங்கீகரிக்கப்படாத பயணியாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த நபர் எந்த வகையில் பயணம் செய்தார் என்பதை காட்ட எங்கள் கம்பனியில் காப்பீடு செய்த நபராக ரமேஷ் என்பவரின் சென்று எதாவது ஆதாரம் வாங்கி வந்தேனா என்றால் விசாரணை செய்துள்ளேன். அவர் கொடுத்த தரவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை தேவை என்றால் தாக்கல் செய்கிறேன்.

வாகனத்தின் சேதாரம் குறித்து இழப்பீடு வழங்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. விபத்தில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஓட்டுனர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டது என்று நிறுவனத்தில் எதாவது காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோ அல்லது தனி

பிராது கொடுத்தோ நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை, அதற்காக சாட்சியம் அளிக்க தான் நான் வந்துள்ளேன்.

முதல் தகவல் அறிக்கையில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டதாக( further action dropped) அறிக்கையில் உள்ளது என்றால் உண்மை நகல் என்னிடம் இல்லை. கணினி வழியில் எடுக்கப்பட்ட நகலை காட்டி வழக்கறிஞர் கேட்டபோது அது பற்றி தெரியவில்லை என்று சாட்சி தெரிவித்தார்.

எங்கள் ஆவணத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை மேல் நடவடிக்கை கைவிடப்பட்டதாக உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேல் நடவடிக்கை என்ன எடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் நிலுவையில் உள்ளது தான் தெரியும். அது நிலுவையில் உள்ளது என்று காண்பிக்க ஆவணம் எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை.

முதல் தகவல் அறிக்கையில் ஓட்டுனர் இறந்துவிட்டதால் further action dropped என்று மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்றால் இந்த வழக்கிற்காக நான் நிலுவையில் இருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வாகனத்தின் மீது தவறு இல்லை என்று காண்பிக்க எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல, முதல் தகவல் அறிக்கையில் சரியாக சொல்லப்பட்டுள்ளது.

முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளது எங்கள் வாகன ஓட்டுனர் தானே என்றால் அது தவறுதலாக போடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் கள பணியாளரை நியமனம் செய்தோமா என்றால் செய்தோம். அந்த அறிக்கையை தாக்கல் செய்யாமல் எங்கள் வாகனத்தின் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் புலன் விசாரணை மூலமாக

தான்தெரியவந்தது. அந்த கள பணி அறிக்கை எங்களுக்க விரோதமாக இருப்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பின் வரும் காலத்தில் கள பணி ஆய்வு அறிக்கையை வழக்கிற்கு ஏற்றவாறு மாற்றி போட வாய்ப்புள்ளது என்றால் அவ்வாறு அவசியமில்லை.

இந்த விபத்திற்கு முழு காரணம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனம் தான் என்றாலும் இழப்பீடு வழங்குவதை தவிர்ப்பதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் படி அதன்மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் இழப்பீடு வழங்கவதிலிருந்து தப்பிக்க முன்னுக்கு பின் முரணாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தவறுதலாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியமே நிராகரிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 03.00 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.11.11 18:49:13 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.